1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசு பரிசீலித்து நடவடிக்கையெடுக்கும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளில் நடத்துனர்களாகப் பெண்களை நியமிக்கும் திட்டம் இருந்தது. தற்போது அந்தத் திட்டம் எந்த வகையில் அமல் நடத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பெருநகர்ப் பிரிவிலே பெண்களுக்காக விடப் பட்டிருக்கும் பேருந்துகளில் எட்டு பெண்களை நடத்துனர்களாக நியமித்து ஓடிக்கொண்டிருக்கிறது. அது எப்படியிருக்கிறது என்று பார்த்து அதற்குப் பின்னாலே அதை நடை முறைப்படுத்தலாமா அல்லது போதுமா என்பதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சபாநாயகரவர்களே, நகரப் பகுதிகளில் விடப்படும் பஸ்களை நல்ல பஸ்களாக விடுகிறார்கள். ஆனால் கிராமப் பகுதிகளில் ஓடும் பஸ்கள் சரியான கண்டிஷனில் இல்லாத காரணத்தினால் நான்கைந்து நாட்களுக்கு ஒரு முறைதான் ஓடுவது என்ற நிலையில் உள்ளது. அந்தக் கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பஸ் வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்து, தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்காகப் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு நேரத்தில் போய்ச் செய்ய வாய்ப்பில்லாமல் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் விடப்பட்ட..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நடத்துனர்களைப் பற்றிய கேள்வி. கிராமப் பகுதிகளில் விடப்படும் பஸ்களைப் பற்றி இதில் வராது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

போக்குவரத்துத் துறையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான பணி இறுதிச் சலுகைகள்.

*வினா எண். 154—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துத் துறையில் வேலை செய்து பிறகு கழகங்களுக்கு வந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய (Terminal Benefits) கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப் படவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) இதை வழங்குவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தெரியும்.

(ஆ) மற்றும் (இ) இதுபற்றி 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்ட அரசு ஆணை அரசால் மறு பரிசீலனை செய்யப்பட்டு 31-3-80 அன்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்புதிய ஆணையின் மீது சிறப்பு அலுவலர், எஞ்சிய பணி போக்குவரத்துத்துறை சில விளக்கங்களைக் கோரினர். இது பற்றிய விளக்கங்கள் சென்ற மே திங்களில் அவருக்குக் கொடுக்கப் பட்டன. தொழிலாளர்களுக்கு பணி இறுதிச் சலுகைகள் (Terminal Benefits) முடிவு செய்து கொடுப்பதற்கென பிரத்தியேகமாக அலுவலர்கள் எஞ்சிய பணி போக்குவரத்துத் துறையில் நியமிக்கப்பட்டு பதிவேடு சரி செய்தல், விடுப்புக் கணக்கு நிர்ணயம் செய்தல் முதலிய முதற்கட்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிய ஆணையின்படி தொழிலாளர்களிடம் புதிதாக விருப்பு (option) பெற்ற பின் அவர்களுக்கு பணி இறுதிச் சலுகைகள் வழங்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டால் 18-4-75 இல் வெளியிடப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா-விடை நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10-00)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : 378 ஆம் நெம்பர் ஜி.ஓ.வை மாற்றி, 284 ஆம் நெம்பர் ஜி.ஓ. போடுவதற்கு அதுவும் தொழிலாளர்களைக் கடினமான முறையில் பாதிக்கக்கூடிய முறையில் உள்ள அந்த ஜி.ஓ. போட காரணம் என்ன ? அதை வாபஸ் வாங்கி, 378 ஆம் ஜி.ஓ. படி தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? இப்பொழுது ஓய்வு பெறக்கூடியவர்களுக்கு, 1975-க்கு முன்னால் வேலை செய்த காலத்திற்கு எந்தவிதமான பணமும் கொடுக்கப்படவில்லை யென்ற காரணத்தால், உடனடியாக, 1975-க்கு முன்னாலே உள்ள காலத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தைக் கணக்கிட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது அவர்களுக்கு ஒரு கணிசமான தொகை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியில் எத்தனை கேள்விகளை இணைக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1975-லே ஆணையிடப்பட்டு அதற்குப் பின்னாலே அது நிறுத்தப் பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற சங்கடங்களைத் தொழிற் சங்கத் தலைவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி ஒரு தனி அலுவலர் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். அவருடைய அறிக்கைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் மட்டுமல்ல, பல்வேறு கழகங்கள் அந்த அறிக்கைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே அறிக்கை வந்தபிறகு, இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால், தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்து ஆலோசித்து, அதுபற்றி முடிவு எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருந்த காலத்திலே பணிபுரிந்த பணியாளர்கள் இப்பொழுது போக்குவரததுக் கழகங்களுக்கு மாற்றப்பட்ட காலத்திலே, முன்னால் பெற்ற பல சலுகைகளை அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்திலே, அந்தச் சலுகைகளோடு, சில சலுகைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, அப்படியே அமுல் நடத்தப்படும் என்று சொன்னதை மாற்றியதற்குக் காரணம் என்ன ? அவர்கள் அரசு போக்குவரத்துத் துறையிலேயிருந்து விலகுகிற காலத்திலே. அவர்கள் ஆற்றிய அந்தப் பணிக்காலத்திற்கு அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் வழங்கப்படாமல் இருக்கிறதே, அதை வழங்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே. போக்குவரத்துக் கழகங்களிலே பல சலுகைகள் உண்டு. அரசாங்க சம்பந்தப்பட்ட துறையிலே பல சலுகைகள் உண்டு. ஒரு சில சலுகைகள் அங்கே இருக்காது, ஒருசில சலுகைகள் இங்கே இருக்காது. அதிலே எது சிறந்தது என்று நாம் சொல்லிவிட முடியாது. பல நேரங்களிலே போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த சலுகைகள் மிகச் சிறந்ததாக இருக்கிறது என்று சொல்லி, தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இங்கே இருந்தால் இந்தச் சலுகை, அங்கே இருந்தால் அந்தச் சலுகை. எனவே, அதிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. ஆனால், தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இருக்கிற பிரச்சினை அவர்கள் அங்கே இருந்த பொழுது இருந்த சில பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டு

மென்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை விசாரிக்க நாம் ஒரு தனி அலுவலரை வைத்து, அவருடைய அறிக்கையை எதிர்பார்க்கிறோம். அந்த அறிக்கை வந்தவுடனேயே தொழிற்ச்சங்கத் தலைவர்களோடு பேசி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே நான் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ரூ. 15 கோடி தொழிலாளர்களுக்கு 'டெர்மினல் பெனிஃபிட்ஸ்' என்ற பெயரிலே கொடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இப்பொழுது கழகங்களைப் பிரிப்பதிலே, பெயர் வைப்பதிலேயே பிரச்சினைகளும் சிரமங்களும் ஏற்படுகின்றன என்ற காரணத்தினாலும் இந்தத் தொழிலாளிகள் விரும்பக்கூடிய முறையிலே மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போல ஒரு ரோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அவர்களுடைய முழு சர்வீசையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ பெயர் பிரச்சினை காரணமாகப் போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கப்படக் கூடாது என்று சொல்வது அவ்வளவு முறை அல்ல. போக்குவரத்துக் கழகங்களைப் பிரிக்க வேண்டுமென்று எத்தனையோ பேர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதே சட்டமன்றத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அது அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அதனுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு இருக்கிற சலுகைகளைப் பிடுங்குவதற்காக அல்ல. அங்கே இருக்கிற மக்களுக்கு ஒரு தனிப்பட்ட அதிகாரி நேரடியாகப் பார்த்து, தன்னுடைய அதிகாரத்திலே மக்களுக்குப் பணி செய்வதற்காகப் போக்குவரத்து வசதியைச் செய்ய வேண்டுமென்பது தான். இருந்தாலும் இந்த அரசு தொழிலாளர்களுடைய அந்தக் கருத்தை மனதிலே கொண்டு அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை நிச்சயமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். எல்லா போக்குவரத்துக் கழகங்களிலேயும் ஒரே சட்டதிட்டம் இருக்கும் தன்மையிலே எல்லா தொழிலாளர்களும் இருப்பதற்கான நடவடிக்கையை நான் எடுத்திருக்கிறேன். அதைப் படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவர இருக்கிறோம்.